**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.391/14**
**வழக்கு சாட்சி – அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.23

**( 1ம் எதிரி இறந்துவிட்டார். 2ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. 3ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் அல்லிகரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுனராக வேலை செய்துவருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 6.4.14 அன்று காலை 10.30 மணிக்கு நான் எஸ்பிடி மினி பஸ்சில் ஓட்டுனராக வேலை பார்த்து வந்தேன். அப்போது நான் ஓட்டுனரை மாற்றுவதற்காக அல்லிநகரம் பேருந்துநிறுத்தத்தில் நின்றுக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு வடக்கு பக்கம் TN 60 D 932 என்ற மினிபேருந்து மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. கூட்டமாக இருந்ததால் அதை என்ன என்று பாரக்க சென்றேன். பேருந்தின் டிரைவர் நான் தான் என்று நினைத்து சிவன் என்பவர் என் முதுகில் ஓங்கி குத்தினார். கொம்மாள ஓக்க, தேவிடியா மகனே என்று பேசி மீண்டும் முதுகில் குத்தினார். பாண்டியராஜ், அலெக்ஸ் இருவரும் மாறி மாறி என்னை அடித்தார்கள். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. 3 நபர்களும் சேர்ந்து ஒழுங்காக ரோட்டில் பஸ்சை ஓட்டவில்லை என்றால் அங்கேயே கொன்று புதைத்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். சக்திவேல் மற்றும் வீரச்சாமி ஆகியோர்கள் விலக்கிவிட்டு என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருக்கும் போது போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். சம்பவம் பற்றி நான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.
எதிரிகள் தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.